---

## 1.நிதிக்கூற்றுக்கள

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

வ/ப றக்னா புரஜெக்ட் மனர்ஜிங் கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காட்டியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அபடிப்டை

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காட்டியுள்ள விடயங்களின் அடிப்படையில் நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயத்தை வெளியிடுகிறேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அபடிப்டை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, கட்டுப்படுத்தும் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி, நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியினால் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் கொடுப்பனவு கட்டுப்பாட்டு முறைமை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகள் பிரகாரம், அனைத்து காசோலைகள் / காசுக் கொடுப்பனவு தொடர்பாக பொறுப்பேற்ற நபரின் பெயர், கையொப்பம் மற்றும் திகதி வவுசரினுள் உரியவாறு குறிக்கப்பட வேண்டிய போதும் ரூபா 250,087 பெறுமதியுடனான வவுசர் | எதிர்காலத்தில் இவ்வாறான அவதானிப்புக்கள் இடம் பெறாதவாறு செலுத்தற் பத்திரங்களை வழங்குவதனை உரிய முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளுமாறு குறித்த ஆளணியினரிற்கு | கொடுப்பனவு தொடர்பான உள்ளக கட்டுபாட்டு முறைமையை உரியவாறு பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவுருத்தல் வழங்கியுள்ளதென. | |
| (ஆ) | கம்பனியின் கொடுப்பனவு கட்டுப்பாட்டு முறைமை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகள் பிரகாரம், அனைத்து கொடுப்பனவுகளிற்கும் உரியதாக அதிகாரம் பெற்ற அலுவலரினால் கொடுப்பனவுகளை அனுமதித்தல் மற்றும் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்காக கையொப்பமிடல் கட்டாணமாகும். எனினும் ரூபா 283,065 பெறுமதியுடனான வவுசர் தயாரக்கும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கம்பனியின் அனைத்து கொடுப்பனவுகளும் குறித்த அதிகாரம் பெற்ற அலுவலரின் உரிய அனுமதி மற்றும் உறுதிப்படுத்தல் மீது மேற்கொள்ளப்படுவதுடன் அவதானிப்பின் மூலம் சுட்டிக் காட்டியுள்ள கொடுப்பனவு வவுசர் குறித்த அதிகாரம் பெற்ற அலுவலரின் தவறினால் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான அவதானிப்புக்கள் இடம் பெறாதவாறு செயற்பட நடவடிக்கை எடுப்பதென. | கொடுப்பனவு செய்யும் போது உறுதிப்படுத்தல் மற்றும் அனுமதித்தல் பக்கம் அதிக கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த காலப் பகுதிக்குரிய ரூபா 334,098 ஆன வாகன வாடகை, பராமரிப்பு செலவு, காணி வாடகை, போக்குவரத்து செலவு போன்றவை நடைமுறை ஆண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | 2021/2022 நிதியாண்டிற்கு உரிய பட்டியல்கள் 2022/23 நிதியாண்டில் நிதிப் பிரிவிற்கு கிடைத்திருந்ததால் 2022/23 நிதியாண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதென. | காலப் பகுதிக்குரிய செலவுகளை உரியவாறு இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஏப்ரல் 01 முதல் ஜுன் 30 வரை தொழிலாளர் சம்பளம் ரூபா 497,595 இனாலும், தொழிலாளர்களுக்கான விழா முற்பண படிகளாக ரூபா 30,000 உமாக கூட்டுத் தொகை ரூபா 527,595 ஆன செலவு மற்றும் அலுவலக பணி ஆளணியினர் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 457,650 தொகை தாய் கம்பனியால் செலவிட்டுள்ள போது மீளாய்வு நிதிக் காலப் பகுதிக்கு உரியதாக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஆண்டிற்குரியதாக செலவிடப்பட்ட | காலப் பகுதிக்குரிய ஒட்டு மொத்த தொழிலாளர் சம்பள செலவான ரூபா 302,779 தொகை விடய எழுதுனரின் தவறினால் நில செயற்பாட்டு பிரிவின் சம்பளமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கம்பனியின் (RPML) ஆளணியாக வரையறுக்கப்பட்ட றக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் நபர்கள் இணைக்கப்பட்டிருந்ததால் அவர்களின் சம்பளம் றக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் சம்பளமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | செயற்பாடுகளிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 332,779 தொழிலாளர் சம்பளம் மற்றும் விழா படிகள் செலவும் ரூபா 457,650 ஆன ஆளணி சம்பளம் மற்றும் படிகளும் உள்ளடக்கப்பட்டு இருக்காததுடன் அது தொடர்பாக வெளிப்படுத்த ஏனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலும் வரையறுக்கப்பட்ட றக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் மற்றும் றக்னா புரஜெக்ட் மனர்ஜிங் கம்பனியின் 2023/2022 நிதி அறிக்கைகளிற்கு இதன் மூலம் தாக்கம் இடம்பெற்றாலும் றக்னா தொகுதியின் 2023/2022 நிதி அறிக்கைகளிற்கு இதன் மூலம் தாக்கம் ஏற்படவில்லையென. | |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான தேறிய காசுப்பாய்ச்சலை கணிப்பிட வரிக்கு முந்திய இலாபத்தை அடிப்படையாக்க கொள்வதாக காசுப்பாய்ச்சல் கூற்றினுள் குறிப்பிட்டிருந்த போதும் வரிக்கு முந்திய இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டிருந்தது. | 2023/ 2024 நிதியாண்டிற்குரிய நிதி அறிக்கைகளில் உள்ளடங்கும் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது வரிக்கு முந்திய இலாபத்தை அடிப்படையாக்க கொண்டு தயாரிக்க நடவடிக்கை எடுப்பதென. | நிதிக்கூற்றுக்கள் மூலம் சரியான தகவல்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நியமத்திற்கு இணங்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |

### 1.5.3 அமைப்பின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஜுலை 07 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வகையில் முகாமைத்துவம் கம்பனியின் செயற்பாடுகளை நிறுத்தியுள்ளதால், கம்பனி தொடர்ந்து இயங்கும் கம்பனி ஒன்றல்ல எனும் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக காண்பிக்கும் நிதிக்கூற்றுக்களின் 2.8 குறிப்பின் பிரகாரம் கம்பனியின் செயற்பாடுகளை நிறுத்தியதன் பின்னர் கம்பனி தொடர்ந்து இயங்கும் கம்பனி ஒன்றாக தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கு காணப்படும் இயலாமையை உறுதி செய்யும் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2023 ஜுன் 20 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட | 2022/2023 நிதி அறிக்கையை தயாரித்து கணக்காய்விற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பம் வரை வரையறுக்கப்பட்ட றக்னா புரஜெக்ட் மனர்ஜிங் லிமிடட் (RPML) கலைக்க தேவையான பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்தருந்ததால் நிதி அறிக்கையை தயாரிக்கும் போது கலைக்கும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதென. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ள வெளிப்படுத்தல்களிற்கு உரியதாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

தீர்மானம் பிரகாரம், 2022 /2023 நிதியாண்டிற்காக நியதிச் சட்ட கணக்காய்வு முடிவடைந்த பின்னர் கம்பனியை கலைக்க ஆரம்பிக்க பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. அதனால் நிதிக்கூற்றுக்களை குறித்த நிதி அறிக்கையிடலிற்கு இணங்க கலைக்கும் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 7 இலக்க கம்பனிச் சட்டம் | | | |
| | (i) 150(1) பிரிவு | ஐந்தொகை திகதியிலிருந்து 06 மாதங்களிற்குள் அல்லது கம்பனி பதிவாளரினால் நிச்சயித்து நீடிக்கும் காலப் பகுதியினுள் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ள வேண்டிய போதும் 2023 மார்ச் 31 திகதியுடன் முடிவடைந்த காலப் பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்கள் ஐந்தொகை திகதி முடிவடைந்து 06 மாதங்களிற்குள் அல்லது கம்பனி பதிவாளரினால் நிச்சயித்து நீடிக்கும் காலப் பகுதியினுள் தயாரித்து இருக்கவில்லை. | 2021/22 நிதி ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை உரிய காலப் பகுதினுள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத காரணத்தால் அதன் பின்னர் மேற்கொள்ள வேண்டிய எதிர்வரும் அனைத்து செயற்பாடுகளும் தாமதிப்பதனை தவிர்த்துக் கொள்ள முடியாததன் மீது 2022/23 நிதிக்கூற்றுக்களையும் எதிர்பார்த திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாதுள்ளதாகவும், அதனை நீடித்துக் கொள்ள கம்பனி பதிவாளரிடமிருந்து அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் கம்பனியினால் அதன் பிரகாரம் | சட்டத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் தயாரித்து உரிய திகதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கவில்லையென. | |
| (ii) 220 பிரிவு | கம்பனி ஒன்றின் தேறிய சொத்துக்கள அந்த கம்பனியின் வெளியிட்ட மூலதனத்தின் சரியாக அரைவாசியை விட குறைவு என தெளிவாகும் சந்தர்ப்பங்களில் கம்பனிக்கு சுமக்க நேரிட்டுள்ள நட்டங்களின் தன்மை மற்றும் அளவு, நட்டத்திற்கான காரணம் மற்றும் அவ்வாறான நட்டம் தொடர்ந்தும் ஏற்படுவதனை தவிர்க்க அல்லது சுமக்க நேரிட்ட நட்டத்தை ஈடுசெய்து கொள்ள அல்லது பணிப்பாளர் சபையினால் எடுத்துள்ள முயற்சிகள் தொடர்பாக பங்குதாரர்களிற்கு அறிவிப்பதற்காக பணிப்பாளர் சபையினால் அறிக்கையொன்றை தயாரித்து அந்த அறிக்கையுடன் கம்பனி பங்கதாரர்களின் அதிவிசேட பொதுக் கூட்டமொன்றை அக்கம்பனி பணிப்பாளர் சபையினால் கூட்ட வேண்டிய போதும் கம்பனி மீளாய்வாண்டினுள் தேறிய சொத்துக்களின் பெறுமானம் ரூபா 2.518 ஆன மறை பெறுமதியாகவிருந்த போதும் அந்த பிரமாணம் பிரகாரம் அறிக்கையொன்றை தயாரிக்க அல்லது கூட்டமொன்றை கூட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கம்பனியின் 100 சதவீத பங்குரிமை தாய் கம்பனிக்கு (RALL) உரித்தாவதுடன் கம்பனி இரண்டினதும் பணிப்பாளர் சபை ஒன்றாவதால் கம்பனிக்கு எற்பட்டுள்ள இந்த நிலைமையை பணிப்பாளர் சபை கூட்டங்களிலும் அடிக்கடி கலந்துரையாடப்படுகின்றது. RPML கம்பனி கம்பனி சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க மூடுவதற்காக அந்த கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை (Audited Accounts) தேவையாவதுடன் கணக்காய்வு செய்யப்பட்ட 2022/2023 கணக்கறிக்கை (Audited Accounts) கிடைத்த பின்னர் RPML பங்குரிமையாளரான RALL கம்பனியின் பணிப்பாளர் சபையினால் வழங்கிய அறிவுரை பிரகாரம் மூமுவதற்கு தேவையான முன்நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளப்பட உள்ளதென. | கம்பனி சட்டத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் அறிக்கையொன்றை தயாரிக்க மற்றும் கூட்டமொன்றை கூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 இன் 19 இலக்க கணக்காய்வு சட்டத்தின் 16(1) மற்றும் 16(2) பிரிவு | உரியவாறு வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க இயலுமான வகையில் கணக்கறிக்கை மற்றும் புத்தகங்களை பேணிச் செல்ல வேண்டும் எனவும், குறித்த சட்ட ரீதியான தேவைப்பாடுகளில் குறிப்பிட்டுள்ள கால எல்லையினுள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதானது 02 ஆண்டுகள் மற்றும் 06 மாதங்கள் கடந்த பின்னர் அதாவது 2025 ஒக்டோபர் 22 திகதி ஆகும். | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) மற்றும் 16(2) பிரிவு பிரகாரம் 2021/2022 நிதி ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை உரிய காலத்தினுள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத காரணத்தால் அதன் பின்னர் மேற்கொள்ள வேண்டிய அனைத்து முன்நடவடிக்கைகளும் தாமதமாவதை தவிர்க்க முடியாததன் மீது 2022/2023 நிதிக்கூற்றுக்களையும் எதிர்பார்த்த திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாதுள்ளதென. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் குறிப்பிடப்படும் பிரகாரம் உரிய திகதியில் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 131,910 வரிக்கு பின்னரான இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 2,650,628 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,782,538 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு மீளாய்வாண்டின் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 848,573 ஆன அளவினால் அதாவது 419 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் ரூபா 776,200 ஆன அளவினால் ஏனைய வருமானங்களை ஈட்டியிருந்தமை காணரமாக இருந்தது.

### 2.2 முக்கிய வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வு காலப் பகுதியில் கம்பனியின் வருமானம் முன்னைய காலப் பகுதிக்கு ஒப்பாக ரூபா 202,161 ஆன பெறுமானத்திலிருந்து ரூபா 1,050,734 வரை 419 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் ரூபா 776,200 ஆன அளவினால் ஏனைய வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. நிருவாக செலவு முன்னைய காலப் பகுதிக்கு ஒப்பாக ரூபா 2,029,365 ஆன பெறுமதியிலிருந்து ரூபா 1,138,982 வரை 43.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஜுன் 15 திகதி றக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்திருந்த உத்தேச தீர்மானத்தின் 1.10 பந்தியில் காட்டப்படுவதன் பிரகாரம் அதன் போது நாட்டில் நிலவிய சேதனை பசளை பற்றாக்குறைக்கு தீர்வாக சேதன பசளை உற்பத்தி செய்யும் நிலையமொன்றை விரைவில் ஆரம்பிக்குமாறு சனாதிபதி செயலணியினால் அறிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் சேதன பசளை உற்பத்தி செய்யும் செயன்முறைக்காக றக்னா புரஜெக்ட் மனர்ஜிங் கம்பனி (RPML) நிறுவப்பட்டு இருந்ததுடன் கம்பனியின் அமைப்பு சட்டவிதியின் நோக்கம் எதுவும் குறிப்பிடப்படாத போதும் சேதன பசளை உற்பத்தி செயற்திட்டம் தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரத்தை எதிர்பார்த்து பணிப்பாளர் சபையினால் கைச்சாத்திடப்பட்ட உத்தேச தீர்மானத்தை மாத்திரம் உள்ளடக்கி இந்த செயற்திட்டம் ஆரம்பித்திருந்தது. சேதன பசளை உற்பத்தி நடவடிக்கைகளின் பின்னர் 2023 மார்ச் 31 திகதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்த தேறிய சொத்துக்கள் ரூபா 2.518 மில்லியனான மறை பெறுமானத்தை எடுத்திருந்ததுடன் 2022 ஜுலை 07 திகதி கம்பனியின் சேதன பசளை உற்பத்தி செயற்திட்டத்தின் அனைத்து செயற்பாடுகளும் நிருத்தப்பட்டிருந்தன. | சேதன பசளை உற்பத்தி செய்வதற்காக கம்பனி நிறுவப்பட்டுள்ளதுடன் கம்பனி ஆரம்பத்தில் மேற்கொள்ள வேண்டிய செயன்முறையை கடைபிடிக்காமை தொடர்பாக விடயங்களை தெளிவுபடுத்த தேவையான தகவல்கள் தற்போது கம்பனியிடம் காணப்படும் கடிதக் கோவையில் உள்ளடக்கப்படாததால் விடயங்களை தெளிவுபடுத்த இயலுமை இல்லை. 2022 ஜுலை 07 திகதி கம்பனி (RPML) மூடப்படல் இடம்பெறாததுடன் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 3/2022 கீழ் குறிப்பிடப்படும் அறிவுரைகளை கடைபிடித்து 2022 ஜுலை 07 திகதி முதல் செயற்திட்டத்தின் அனைத்து செயற்பாடுகளை மாத்திரம் இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2023 ஜுன் 30 திகதி நடைபெற்ற 153 ஆம் பணிப்பாளர் சபை கூட்டத்தில் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் கம்பனியை சட்டரீதியாக (RPML) மூடிவிட முனநடவடிக்கைகளை எடுக்குமாறு அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2022/2023 கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை (Audited Accounts) கிடைத்த பின்னர் கம்பனியை முடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதென. | முறையான செயன்முறைகளிற்கு மாற்றமாக RPML கம்பனி நிறுவப்பட்டமை மற்றும் அதன் தோல்வி தொடர்பாக சட்டரீதியான செயற்பாடுகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |